அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

எல்லாம் செயல் கூடும்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி


# தீப நெறி


தீபம் 10 நெறி 5 | சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்கள் இதழ் | விலை ₹1 | டிசம்பர் 2019


பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...

வளமிக்க
வையகத்தை
வார்த்தெடுப்போம்!



**அதுவினுள் அதுவாய் அதுவே அதுவாய்**
**பொதுவினுள் நடிக்கும் பூரணப் பொருளே**

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க!!!




## வாயார வாழ்த்துகிறோம்


தருமச்சாலை கட்டிட நிதியாக
ரூ 1,00,000
அள்ளிக்கொடுத்த வள்ளல்
மைலாப்பூர்
**திரு K.S. சுந்தர ராமன்** தம்பதிகளை
தீபம் வாழ்த்தி மகிழ்கிறது.

## தொண்டிற்கு தலை வணங்குகிறோம்


பள்ளி விடுமுறை நாட்களில்
தருமச்சாலையில் தொண்டு
செய்யும் அன்பு குழந்தை
**S. மேனகா**
அவர்களை
தீபம் வாழ்த்துகிறது.




## " தீபநெறி " ஆசிரியர் குழு




**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர், சென்னை.
கைபேசி : 95518 49757



**செ. கதிர்வேல்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
ஈரோடு.
கைபேசி : 98659 39896



**பொதிகைபிரியன்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கள்ளக்குறிச்சி
கைபேசி : 97897 88198



**அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
இராணிப்பேட்டை.
கைபேசி : 80564 38488



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி மாத இதழ்.
கைபேசி : 94440 73635



தருமம்

# தீபநெறித் தொண்டர்களின் தினசரித் தியானம்

ஆக்கம்
திரு. கே.என். உமாபதி அவர்கள்,
கே.கே. நகர்



தவம்



1. **அ**றியாமை அடியோடு அகலட்டும்!
2. **ஆ**ன்ம நேயம் ஆல்போல் தழைக்கட்டும்!
3. **இ**ல்லாமை இல்லாமல் புதையட்டும்!
4. **ஈ**வது இயல்பாய் இருக்கட்டும்!
5. **உ**யிரிரக்கம் எங்கும் உலவட்டும் !
6. **ஊ**க்கமுற்று யாக்கைகள் ஒளிரட்டும்!
7. **எ**ல்லா உயிர்களும் இன்புற்று வாழட்டும்!
8. **ஏ**ற்றத்தாழ்வு இடருற்றுப் போகட்டும்!
9. **ஐ**ம்பூதங்கள் மாசுபடுவதைத் தடுக்கட்டும்!
10. **ஒ**ன்றே இறையென உணர்த்தட்டும்!
11. **ஓ**யாமல் வையகத்தில் அருட்பா ஒலிக்கட்டும்!
12. **ஔ**டதமாம் அருட்பெருஞ்ஜோதி அற்புதங்கள் நடத்தட்டும்!

**தருமம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!**

**நித்ய தீபத் தருமச்சாலை வளாகம் எண்.7/8 புத்தேரிக்கரை தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை– 600 042.**

**கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே (1398)**

# பூக்களாய் மாறலாமே!

**விண்ணிடத்தே முதல் முப்பூவிரிய அதில் ஒரு பூவிரிய அதில் மற்றொரு பூவிரிந்திட இவ்வைம்பூக்**

**கண்ணிடத்தே பிறிதொரு பூ கண்மலர அதில் கட்டவிழ வேறொரு பூ விட்ட எழுபூவும்**

**பெண்ணிடத்தே நான்காகி ஆணிடத்தே மூன்றாய் பிரிவிலவாய் பிரிவுளவாய் பிறங்கி உடல் கரணம்**

**நண்ணிடத் தேர்ந்தியற்றி அதன் நடுநின்று விளங்கும் நல்ல திருவடிப் பெருமை சொல்லுவதார் தோழி!**

(அருட்பா 5657)

விண்ணிடத்தே முதல் முப்பூ விரிய விண்ணின் முதற்பூவாம் வெளி(ப்பூ) மலர்ந்தபின். வளி(ப்பூ) எனும் இரண்டாம் பூவாய் விரிந்த காற்று அதில் சுழன்ற (ஆடிய) தருணம் - மூன்றாம் பூவாம் நெருப்பு எனும் அனல்(பூ) அதை எங்கிருந்தோ வந்து அணைந்தது. (வெளியிடைப் பகுதியின் விரிவியல். அணைவியல் - அகவல்) அதில் ஒரு பூ அணைந்த அனல்பூவின் மகரந்தத்தில் (ஆக்ஸிஜன் - பிராணவாயு) அப்பூ என்னும் அமுதப் புனல்பூ அரும்பியது.

அதில் மற்றொரு பூ விரிந்திட அப்புவான அப்பூவின் சூழலில் ஐந்தாம் பூவாக பூமியென்னும் பூலோகம் விரிந்திட இவ்வைம்பூக் கண்ணிடத்தே இந்த ஐம்பூ (துங்களின்) மடியில் பிறிதொரு பூ கண்ணிடத்தே இந்த ஐம்பூ (துங்களின்) மடியில் பிறிதொரு பூ கண்மலர இதில் தொடர்பில்லாத பிறிதொரு பூவாம் உயிர்(ப்பூ) எனும் கருப்(பூ) கண்மலர்ந்தது (புறநடுவொடு கடை புணர்பித்து - அகவல் 513-546)

அதிலே கட்டவிழ வேறொரு பூ அதன் வடிவம் தளர்ந்து கட்டவிழ்ந்த காரணத்தைப் பார்க்கும் தருணத்தில் அதனுள் வேறொரு பூவாம் விதி(ப்பூ) காணப்பட்டது. இப்படி.

விட்ட எழுபூவும் விதி(ப்பூ) உருவாக்கி விட்ட ஐம்பூ (பூதங்கள்) உயிர்(ப்பூ) ஆகிய ஏழு பூக்களையும். பிரிவிலைவாய் (சங்கமித்தலும்) பிரிதலும் இல்லாத தாவரங்கள் ஆண். பெண் எனப் பிரிவு இல்லாதிருக்கும். நெல் எனும் தாவரத்தை உதாரணப்படுத்திப் பார்க்கலாம். வயலில் விளைந்த நெல்லை மூட்டைகளாகக் கட்டி வைத்திடுவர். சொற்ப அளவிலான நெல்லை எடுத்து நன்கு உலர்த்தி விதைநெல் எனத் தனியாக வைத்திடுவர். அதில் ஈரப்பதம் மிகச் சொற்பமாக இருக்கும். இங்கே விதைநெல்லாகப் பிரித்து வைக்கப்பட்டதே விதி(ப்பூ). அதனுள் முளைக்கும் தன்மை இருக்கும் அது உயிர்(ப்பூ). அந்த நெல்லின் உமி சிறிது நீக்கப்பட்டாலும் அதன் உயிர் நீங்கிவிடும். விதைக்கும் காலம் வந்தவுடன் விவசாயி அந்த விதை நெல்லை ஒரு பானையில் போட்டு நிறைய தண்ணீர் (புனல்பூ) விட்டு மூன்று முதல் ஏழு நாட்கள் வரை வைத்துவிடுவார். அந்த விதை முளைத்துவிடும். ஆக புனல்பூ சேர்ந்த பின்தான் விதிப்பூவும். உயிர்ப்பூவும் முளைக்கும் தன்மை பெறுகின்றன. (இது தாவரங்களின் முதல் முப்பூ) பிறகு வயலில் விதைக்கப்பட்டால் வெளி. வளி. சூரிய வெப்பம். மண் இந்த நான்கு பூக்களால் வளரும். எழு பூக்களின் செயல்பாடுகள் சங்கமிக்காத உயிர்கட்கு இப்படிப் பொருந்தும்.

பிரிவுளவாய் பிறங்கி (சங்கமித்துப்) பிரியும் ஆண் பெண்ணாய் விளங்கும் பிறவிகளையும் அமைக்க எண்ணி, ஆணிடத்தே மூன்றாய் அப்பு எனும் புனல்பூ (திரவ வடிவில் வெண்பூ நிறத்தில் கருப்பூவாம் விந்தினுள்) உயிர்(ப்பூ). விதி(ப்பூ) ஆகிய (நீர். உயிர். விதி) முப்பூக்களை ஆணிடத்திலும் (சங்கமிக்கும் உயிர்கள் தோன்றக் காரணமாக முதல் முப்பூக்கள் இவை). பெண்ணிடத்தே நான்காயி வெளி(ப்பூ) கருப்பையாகவும், வளி(ப்பூ) அசையும் கொடிகளில் மூச்சுக்காற்றாகவும், அனல்பூ எனும் வெப்பு - உடலில் பரவிக் காக்கும் வெப்பமாயும் (கண் மலர்ந்து ஒளிவீசக் காரணமாயும்) பூலோகத்தின் உணவுப் பொருட்களின் மூலங்களான தாது(ப்பூக்களையும்) ஆக (வெளி. வளி. வெப்பம். மண்) இந்நான்கு பூக்களை பெண்ணிடத்தேயும் அமைத்து (எழுபூவும் சேருங்கால்).

உடல் கரணம் நண்ணிட உடல் கூறுகள், கரணங்கள் இன்னும் பிறவற்றைச் சேர்த்து தேர்ந்து இயற்றி வினைப்பயனுக்குத் தக்கவாறு ரூப, சொரூபங்களைத் தேர்வு செய்து (தனித்தனி வடிவினும் தக்க ஆண். பெண் இயல் அகவல் 715) உயிரினங்களை உருவாக்கிப் பெருக்கி அதன் நடுநின்று விளங்கும் அதன் பிறகும் அப்பிறவிகளின் இயக்கங்களை நடுவு நிலையில் இருந்து உலகினை நடத்தும்/நல்ல திருவடிப் பெருமை பயனுள்ள திரு(வாம் - உலகச் செல்வத்தையும் - உயிர்ச் செல்வத்தையும்) வடி (வமைத்த) பெருமை (விஞ்ஞான அடிப்படையில் நாம் இங்கு விளக்கம் பெற முயல்வதால்- திருவடிப்பெருமை என்பதை உருவத்தை வடிவமைத்த பெருமை (Fabricators Pride) எனக் கொள்வதே சரி. திருவடி


**களைப்பறக் கிடைத்த கருணை நன்னீரே**
**இளைப்பற வாய்த்த இன்சுவை உணவே (1400)**

என்பது ஏதோ உருவமுள்ள இறைவனின் பாதங்கள் எனக் கொள்வதைத் தவிர்க்கலாம். சொல்லுவதார் தோழி என்பதை (இதுவரை) இப்படி சொன்னது யார்? சொல் மனமே!

இராமலிங்கப் பெருமானார் காலம்வரை வாழ்ந்த எத்தனையோ விஞ்ஞானிகளும். மெய்ஞானிகளும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாதளவுக்கு அருட்பாவில் ஆழ்ந்த அறிவியல் காணப்படுகிறது. அந்தப் பானைச் சோற்றில் ஒரு சோறுதான் மேலே கண்ட பாடல் 5657. உலகம். உயிர்கள் தோன்றிய விதம். ஒப்பிட்ட விதம். வரிசைப்படுத்திய விதம். பிரிவிலவாய் போன்ற நுண்மைகளைப் புகுத்திய விதம். இவையெல்லாம் விஞ்ஞானிகட்கு வியப்பூட்டும். அது சொல்லப்பட்ட நயம் அதைவிட அற்புதமானது. ஐம்பூதங்களை. வள்ளலார் ஐம்பூக்கள் என்று ஏன் சொன்னார்? பூதங்களும் பூக்களைப் போல விரியும் தன்மை உள்ளவையே! பூதங்கள் விரிந்து கொண்டே இருப்பதால்தான் அதன் நுண்மையில் இன்னும் ஒரு விழுக்காடு கூட நம்மால் அறிய முடியவில்லை. இன்னும் என்னவெல்லாம் விண்ணிலுள்ளது? விண்கலம் நாம் செலுத்துகிறோம். விண்ணைப் படைத்தது எவன்? கப்பலை கட்டி கடலில் செலுத்துவது நாம். கடலை படைத்தது எவன்? மண்ணைத் தோண்டி பொன்னை எடுப்பது நாம். மண்ணை படைத்து அதில் பொன்னைப் போட்டு வைத்தது எவன்? காற்றில் விமானம் பறக்க விட்டது நாம். காற்றைப் படைத்தது எவன்? அந்த இறைவனின் படைப்பில் ஒரு விழுக்காடு கூட அறிய முடியாத நாம் அதைப் படைத்தவனைப் பற்றி எந்தளவில் நம்மால் அறிய முடியும்? அவன் படைப்புகள் விரிந்து கொண்டேயிருக்கும் பூ. அந்தப்பூ நம் கையில் கிடைத்துவிட்டது. நம் விபரீத அறிவினால் அதை எப்படியெல்லாம் பிய்த்து எறிகிறோம் தெரியுமா?

விண்வெளியெங்கும், உளவு பார்க்கும் உபகரணங்களை அந்தரத்தில் ஆடவிட்டிருக்கிறோம். நாசவேலை செய்யும் ஏவுகணைகளை விண்ணில் பாய்ச்சிப் பரிசோதிக்கிறோம். இறைவன் இதற்காகவா விண்ணைப் படைத்தான்? சுவாசிப்பதற்கேற்ற காற்று உலகில் எங்காவது உள்ளதா? வாகனங்களும், ஆலைகளும் கக்கும் நச்சுப் புகைகளை நமக்கு எத்தனை விதமான நோய்களை இனாமாகத் தருகிறது? தண்ணீரைக் கெடுத்தது யார்? இரண்டுமே மனித சமுதாயத்தின் சாதனைகள். **Dead Sea** இருப்பதைப் போல நாம், **Dead River** களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். பட்டாப்போட்டு சொந்தமாக்கிக் கொள்ளாத நிலம் பாரினுள் ஒரு சதுர அடியாவது உண்டா? நாடுகட்கு இடையே எல்லைக்கோடுகள். அதை மீறுவதால் யுத்தக் கேடுகள். அந்தக் கோட்டுக்கு இருபுறமும் தோண்டிப் பார்த்தால் மண்ணுக்காகப் போரிட்டு மடிந்த மனிதர்களின் மண்டை ஓடுகள். சொந்தம் கொண்டாடவா குவலயம் படைக்கப்பட்டது? இப்படியெல்லாம் பூதங்கள் என்னம் பூக்கள் பிய்த்து எறியப்படுகின்றனவே என்று மனம் நொந்து, வாலிலேன் இருக்கில் வனத்திலே இருக்க வாய்ப்புளேன் (அருட்பா 3358) என மனித இனத்தின் கிடைத்ததை பிய்த்து எறியும் குணம் குறித்துச் சொல்கிறார் வள்ளலார். இது முழுமையான உண்மை!

பிய்த்து எறியப்படுவது ஐம்பூக்கள் மட்டுமா? ஏழு பூக்களைச் சேர்த்து உருவாக்கப்பட்ட உயிரினங்கள் இன்னும் அதிகமாகவே அவலப்படுத்தப்படுகின்றன. மரங்களை வெட்டுவது. பிராணிகளை வதைப்பது, பலியிடுவது மனிதர்களை கொடுமைப்படுத்தும் அதிகார வர்க்கம், பணவலிமை, மதக் கலவரங்கள். பெண் குழந்தைகள் மீதான அராஜகங்கள், அட்டூழியங்கள், சட்ட சீர்குலைவுகள், வஞ்சனைகள் இப்படி எத்தனையோ ஆன்ம நேயத்திற்குப் புறம்பான கொடுமைகளை எழுத்தில் வடிக்க இயலவில்லை. இந்தப் பூக்களின் இரகசியங்கள் தெரியாமல், ஐம்பூக்களும், ஏழு பூக்களும் படும் இன்னல்களைப் பார்த்த பிறகும் என்ன செய்வதென்றே தெரியாமல் புழுங்கி, புழுங்கி, பூத்து, பூத்து இதழ்கள் வெடித்து வீழும் இலுப்பை பூக்கள் நாம்! கடிமணமற்ற கனகாம்பரப் பூக்கள் நாம்! காயசித்த பெறத் துணியாத காகிதப் பூக்கள் நாம்! ஊர் வம்பு பேசிடும் ஊமத்தம்பூக்கள் நாம்! கடவுளைக் காண விழையாத கள்ளிப் பூக்கள் நாம். இரக்க மனமற்ற எருக்கம் பூக்கள் நாம்! இப்படிப்பட்ட தன்மையுடன் இந்த ஏழு பூக்களாய் ஆகி இத்தனை நாட்கள் வாழ்ந்து விட்டாலும் அதை மறப்போம். இனியதை நினைத்து இது தொடங்கி அனைவருக்கும் உதவிடும் ஐம்பூக்களைப் போல மனித நேயமிக்க மல்லிகைப் பூக்களாய், சத்விசாரம் செய்யும் சாமந்திப் பூக்களாய், கொலைபுலை தவிர்த்த கொன்றைப் பூக்களாய், தற்போதமிழக்கும் தாமரைப் பூக்களாய், சன்மார்க்க சங்கத்தை அலங்கரிக்கும் சண்பகப் **பூக்களாய் மாறலாமே!**



**K.N. உமாபதி**
K.K. நகர், சென்னை
95518 49757

**தென்னைவாய்க் கிடைத்த செவ்விளநீரே**
**தென்னை வான் பலத்தில் திருகுதீம் பாலே (1402)**

# தீபம் அறக்கட்டளையின் பல்வேறு தருமச்சாலைகள் மூலம் தினசரி ஆயிரக்கணக்கானவர்களுக்கு பசியாற்றுவித்தல்









நீர் நசை தவிர்க்கும் நெல்லியங் கனியே
வேர் விளை பலவின் மென்சுவைச் சுளையே (1404)

## சாகும் கல்வி ! சாகாக் கல்வி !

கல்வி என்பது அன்பு, அறிவு, ஒழுக்கம் போன்ற நற்குணங்களைப் பெற்றுத் தருவதாகும். ஆனால் இன்று கல்வி என்பது பொருள் ஈட்டுவதற்கு மட்டும் பயன்தரக்கூடியதாக உள்ளது. அதுவும் நேர்வழியில் பணம் சம்பாதிக்க அந்த கல்வி பயன்படாமல் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க வழிகாட்டுகிறது.

குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கும் கல்வி அவர்களையும் அவரை சார்ந்தவர்களையும் அழித்துவிடுகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

கல்வி என்பது புத்தியை வளர்த்து கொள்ளாமல், அறிவை வளர்த்து கொள்ள வேண்டும். தங்களைப் போல மற்றவர்களையும் வாழ வைக்கும் பண்பு உடையதாக இருக்க வேண்டும். அன்பு, அறிவு, ஒழுக்கம், நேர்மை, வாய்மை, துய்மை, உண்மையான சுயநலமற்ற ஜீவகாருண்யம், பொதுவான இரக்ககுணம் எதிலும் பொது நோக்கம் உள்ள கல்வியே சிறந்த கல்வியாகும் எந்த உயிர்களையும் அழிக்காமல் வாழ வைக்கும் கல்வியே சிறந்த கல்வியாகும். கொலை செய்யாமை, புலால் உண்ணாமை ஜீவகாருண்யம் போன்ற ஒழுக்கத்தைக் கடைபிடிப்பதே சிறந்த கல்வியாகும்.

**கல்வி இரண்டு வகைப்படும் !**

**வள்ளலார் பாடல் !**

**துன்மார்க்க நடையிடைத் துங்குகின் றீரே**
**துக்கத்தை விடுகின்ற துணைஒன்றும் கருதீர்**
**சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர்**
**சாவையும் பிறப்பையும் தவிர்ந்திட விரும்பீர்**
**பன்மார்க்கம் செல்கின்ற பழிற்றுளம் அடக்கீர்**
**பசித்தவர் தம்முகம் பார்த்துண வளியீர்**
**என்மார்க்கம் எச்சுகம் யாதுநும் வாழ்க்கை**
**எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.!**

ஒன்று சாகும் கல்வி, மற்றொன்று சாகாக்கல்வி ! எந்த வகையிலும் சுயநலத்திற்காக பொருள் சேர்ப்பது சாகும் கல்வியாகும்.

அறிவுக் கல்வியைக் கற்றுக் கொண்டு இறைவன் அளிக்கும் அருளைப் பெறுவது சாகாக்கல்வி ஆகும். சாகாக் கல்வியைக் கற்று வாழ்வதே மனித பிறப்பின் லட்சியமாகும். இதை அறிந்தவன் எவனோ அவனே மனிதன், அவனே இறைவன், மனிதனும் தெய்வமாகலாம் என்பது சாகாக் கல்வியாகும்.

சாகாக் கல்வியை கற்றுத் தருவது, வள்ளலார் காட்டிய சுத்த சன்மார்க்க கொள்கையாகும். அவர்தான் உலக மக்களுக்கு சாகாக் கல்வியை கற்கும் வழியைக் காட்டி உள்ளார். அனைவரும் படித்து அதன் வழியில் தனிமனித ஒழுக்க நெறி நின்று மேல் நிலைக்கு செல்லலாம்.

**வள்ளலார் மக்களுக்கு போதிக்கும் பாடலைப் பாருங்கள்!**

**சாகாத கல்வியே கல்வி ஒன்றே சிவம்**
**தான் என அறிந்த அறிவே**
**தகும் அறிவு மலம் ஐந்தும் வென்ற வல்லபமே**
**தனித்த பூரண வல்லபம்**
**வேகாத காலாதி கண்டு கொண்டு எப்பொருளும்**
**விளைய விளைவித்த தொழிலே**
**மெய்த் தொழிலாகும் இந்நான்கையும் ஒருங்கே**
**வியந்து அடைந்து உலகம் எல்லாம்**
**மாகாதல் உற எல்லாம் வல்ல சித்தாகி நிறை**
**வான வரமே இன்பமாம்**
**மன்னுமிது நீ பெற்ற சுத்த சன்மார்க்கத்தின்**
**மரபு என்று உரைத்த குருவே**
**தேகாதி மூன்றும் நான் தருமுன் அருள் செய்தெனத்**
**தேற்றி அருள் செய்த சிவமே**
**சிற்சபையின் நடு நின்ற ஒன்றான கடவுளே**
**தெய்வ நடராஜ பதியே**

மனிதன் மரணம் அடையாமல் ஊன் உடம்பை ஒளி உடம்பாக மாற்றும் அருளைப் பெறுவதே சாகாத கல்வியாகும். அதற்கு வழி என்ன வென்றால்,

கடவுள் ஒருவரே என்று அறிந்து கொள்ளும் அறிவே மனித அறிவாகும். அந்த அறிவினால் உடம்பையும் உயிரையும் ஆன்மாவையும் தெரிந்து கொள்ள முடியாமல் மறைத்துக் கொண்டு இருக்கும், ஆணவம், மாயை, மாமாயை, பெருமாயை, கன்மம், போன்ற ஐந்து மலங்களையும் வென்று ஆன்மாவை மறைத்துக் கொண்டு இருக்கும் அறியாமை அஞ்ஞானம் என்னும் திரைகளை நீக்கும் வழியைத் தெரிந்து கொள்ளும் வல்லபமே சிறந்த

**கட்டுமாம் பழமே கதலிவான் பழமே**
**இட்ட நற்சுவைசெய் இலந்தையங் கனியே (1406)**

வல்லபமாகும்.

உடம்பானது மண்ணுக்கோ, நீருக்கோ, நெருப்புக்கோ, காற்றுக்கோ, கதிர்வீச்சுக்கோ, எமனுக்கோ, கொலைக்கருவிக்கோ, பிறர் இயற்றும் கொடுஞ் செயலுக்கோ வேறு ஏதாவது அறிவியல், விஞ்ஞான கதிர்வீச்சுக்கோ. வேறு பல தீய சக்திக்கோ, மற்றும் எதனாலும் அழிக்க முடியாத உடம்பையும், உயிரையும் காப்பாற்ற வேண்டுமானால் வேகாத கால் என்னும் அருள் காற்றை முழுமையாக சுவாசிக்க வேண்டும்.

காற்றில் நான்கு வகைகள் உள்ளன. பூதக்காற்று, அசுத்தக்காற்று, விஷக்காற்று, அமுதக்காற்று என நான்குவிதமான காற்றுகள் இவ்வுலகில் உள்ளன.

நாம் சுவாசிக்கும் காற்று பூதக்காற்று, விஷக்காற்று, அசுத்தக்காற்றை மட்டுமே சுவாசிக்கிறோம். அமுதக் காற்றை சுவாசிப்பதில்லை.

வேகாத காலாகிய அமுதக் காற்றை சுவாசித்து அருள் உடம்பாக மாற்றும் தொழிலே சிறந்த தொழிலாகும். அதாவது நாம் செய்யும் மெய்த் தொழிலாகும்.

உண்மைக்கடவுள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடன் தொடர்பு கொண்டு அருளைப் பெற்று ஊன உடம்பை ஒளி உடம்பாக மாற்றிக் கொண்டு வாழ்வதே, பேரின்பமாகும். அதுவே ஐந்தொழில் செய்யும் வல்லபமாகும். அதுவே என்றும் அழியாத இன்பமாகும். அந்த இன்பத்தைப் பெற்றுக் கொள்வதே மனிதப் பிறவியின் இன்றியமையாத பிறவிப்பயனாகும்.

என்றும் அழியாத அருளைப் பெற்று ஆன்ம தேகத்துடன் அருள்தேகம் பெற்று (ஒளிதேகம்) வாழ்வதே. சாகாக் கல்வியாகும். மற்ற கல்வி எல்லாம் சாகும் கல்வியாகும்.

சாகாக் கல்வியை உலகுக்கு அறிமுகப் படுத்தியவர் வள்ளலார் ஒருவர்தான் என்பதை மக்கள் அறிந்து கொள்ளவேண்டும். சொல்லியதோடு இல்லாமல் வாழ்ந்து வழியைக் காட்டியவர் நமது அருட் தந்தை அருட்பிரகாச வள்ளலார்.

அந்த மாபெரும் அருளாளர் காட்டிய சுத்த சன்மார்க்க நெறியில் சேர்ந்து. உண்மை ஒழுக்க நெறியான இந்திரிய, கரண, ஜீவ, ஆன்ம ஒழுக்கமுடன் வாழ்ந்து அருளைப் பெறுவோம்! மரணத்தை வெல்வோம்.

இதற்கு இரண்டே வழிதான். ஒன்று ஜீவகாருண்ய ஒழுக்கம், மற்றொன்று சத்விசாரம்.

இறைவனை நினைப்பது எவ்வண்ணம் என்பதை வள்ளலார் பாடலில் காண்போம்.

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந்
தன்பேநிறைந்துநிறைந் துற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு

நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று

வனைந்து வனைந்து ஏத்துதும்நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்.

புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம்

இதுவே! மரணமிலாப் பெருவாழ்வுக்கு வழி !
நிந்தையிலார் நெஞ்சகத்தே நிறைந்தபெருந் தகையை

நிலையனைத்தும் காட்டியருள் நிலைஅளித்த குருவை

எந்தையைஎன் தனித்தாயை என்னிருகண் மணியை
என்உயிரை என்உணர்வை என்அறிவுள் அறிவை

சிந்தையிலே தனித்தினிக்கும் தெள்ளமுதை அனைத்தும்
செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதியை உலகீர்

முந்தைமல இருட்டொழிய முன்னுமினோ கரண
முடுக்கொழித்துக் கடைமரண நடுக்கொழித்து முயன்றே!

மேலே கண்ட பாடலில் கண்டுள்ளபடி நினைந்தும் உணர்ந்தும் நெகிழ்ந்தும் இறைவன் அன்பை பெறுவதற்கும் அருளைப் பெற்ற சாகாக் கல்வியை கற்பதற்குண்டான வழியைப் பின்பற்றுவோம்.

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க**
**கொல்லா நெறியே உலகம் எல்லாம் ஓங்குக !**



அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+919865939896

**புனிதவான் தருவில் புதுமையாம் பலமே**
**கனி எலாங் கூட்டிக் கலந்த தீஞ்சுவையே (1408)**

# ஆன்மீகம் - அறிவியல்

ஆன்மீகம் தழுவிய அறிவியல் – அறிவியல் சார்ந்த ஆன்மீகம்

**ஆன்மீகம்** : இறைவனை அறிய முயற்சிப்பதா?
இறைவனை அடைய முயற்சிப்பதா?

ஆன்மீகத்தின் இலக்கணம் : அறன் வலியுறுத்தல்.
ஆன்மீகத்தின் இலக்கு : தெய்வமாதல் ஆண்டவனிடம் ஐக்யம். அறிவியலின் இலக்கணம் : ஆய்தல்
அறிவியலின் இலக்கு : வாலறிவுப் பயணம்
சற்ற விரிவாக விளங்கிக் கொள்ள முயல்வோமா?

அறன் வலியுறுத்தும் ஆன்மீகத்திற்கு, ஆண்டவனோடு ஐக்யமாகும் பயணத்தை தொடர்கிற ஆன்மீகத்திற்கு, அறிவியலின் பங்கு ?? எல்லையற்ற அறிவை நோக்கிய பயணத்தில் – வாலறிவுப் பயணத்தில் ஆன்மீகத்தின் பங்கு?? புரிதலில் சற்று சிரமம் காண்கிறீர்கள் அல்லவா நலம். ஆன்மீகம் பற்றி தற்காலம் புரிந்து வைத்திருப்பவைகளையும், பின்பற்றிடும் ஆன்மீகச் சடங்குகளையும் நினைவு கூர்ந்தால், ஆன்மீகத்தில் அறிவியலின் தேவையும் அறிவியலில் ஆன்மீகத்தின் தேவையும் நன்கு விளங்கும்.

நமது இப்போதைய ஆன்மீகம் மதம் சார்ந்தவை. அனைத்து மதங்களும் தங்கள் சித்தாந்தங்களை எண்ணற்ற எழுத்தோவியங்களாக உலகம் முழுமையும் வழங்கின. இன்றும் தொடர்கிறது. மதங்கள் வழங்கிய சித்தாந்தங்களை சரியாகப் புரிந்து கொண்டு அடுத்த நிலைக்கு, தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டிய மனிதன். மதச் சடங்குகளை செய்வதிலேயே தனது கவனத்தை செலுத்தி. காலப்போக்கில் அந்த சடங்குகளையும் பிழையற செய்யாமல். ஏன் செய்கிறோம் என்று தெரிந்து கொள்ளாமலேயே சடங்குகளை மட்டும் இறுகப் பற்றிக்கொண்டு. ஆலயங்களை வணிகவளாகங்களாக மாற்றிவிட்டு அறியாமைச்சேற்றிலேயே உழல்கிறான்.

மதம் மனிதனைக் காத்திட – மேம்படுத்திட உருவாக்கப்பட்டதுதானே? மதங்களைக் காத்திட எத்தனை அமைப்புகள்! எத்தனை எத்தனை உயிர்ப்பலிகள், துவேஷமும், வெறுப்பும், பகைமையையும் பரப்பும் போதனைகள், தகைமையும் தயவும் மனிதனை நெருங்கவே தயங்குகின்றனவே? வேதனை விலக்கிட என்னதான் செய்யலாம்?

இன்றுவரை நமது புரிதலில் ஆன்மீகம் – ஆலயம் தொழுதல், விரதம் காத்தல், புனித நீராடல், புனித யாத்திரை மேற்கொள்ளல், நேர்த்திக் கடன் செலுத்துதல், சுருக்கமாக சுபிக்ஷ வாழ்வு கோரி விண்ணப்பித்தல்.

ஆன்மீகம் அன்றும். இன்றும் தன் இலக்கை நெருங்கவே இல்லை. சில ஆன்மீகவாதிகள் இலக்கை அடைந்தார்கள். மறைந்தார்கள். நாம் அவர்களை தொழக் கற்றக்கொண்டோமே தவிர. அவர்களிடமும் நமது இடர்ப்பாடுகளை முறையிட்டு தீர்வு கோரி பிரார்த்திக்கிறோமேயன்றி, அவர்கள் நடந்த பாதையில் உறுதியாகதடம் பதிக்கும் எண்ணம் உதிப்பதே இல்லை.

இன்றும், ஆன்மீகவாதிகட்கு குறைவில்லை, அவர்களால் எளியோர், வலியோராக உயர்த்தப்படுகின்றனரா ? சமுதாயத்தில் எங்கோ ஒரு பகுதியிலாவது நல்ல மாற்றம் நிகழ்ந்துள்ளதா ? நீங்கள்தான் விடைகாண வேண்டும்! சில ஆன்மீகவாதிகள் கட்டியுள்ள ஆசிரமங்கள், நூதன ஆலயங்கள், செழித்துவரும் ஆன்மீகத்திற்கு சான்று அல்லவா ? (பத்திரிக்கை செய்திகளை நீங்களும் படித்திருப்பீர்கள்).

ஆன்மீகச் செழிப்பின் அடையாளம் ? ஒரு சிலர் சீராதல் – நற்பண்புகளோடு வாழ்தல் – அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படுதல் இவைகள் ஆன்மீகச்செழிப்பல்ல.

எல்லோரும் நல்லவராதல், அல்லற்பட்டு அழுவோர் இல்லை எனும் நிலை ஏற்படுதல். அன்பு ஆதிக்க சக்தியாதல் – இதுதான் நாம் காணவேண்டிய ஆன்மீகம்.

அறிவு சார்ந்த ஆன்மீகம் போதித்தவர் திருமூலர். ஒன்றே குலம் என்றார். தேவன் ஒருவனே என்றார். நன்றே நினைமின் என்றார். நமனில்லை என்றும் சொன்னார். அந்த தடத்தில் நமது எண்ண ஓட்டம் செல்லவில்லையே ஏன்?

அடுத்து வந்தவர். சித்தர் பெருமக்கள். நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்ட, புரிந்துகொள்ளப்படாத அறிவுக்களஞ்சியத்தை வழங்கியவர்கள் சித்தர்கள். மனிதகுலத்தின் நல்வாழ்விற்கும் – நலவாழ்விற்கும் அவசியத் தேவைகள் அடங்கிய புதையலை அளித்துச்

**இதந்தரு கரும்பில் எடுத்த தீஞ்சாறே**
**பதந்தரு வெல்லப் பாகினின் சுவையே (1410)**

சென்றவர்கள் சித்தர்கள். நம்மில் பலருக்கு அறிமுகமே ஆகாத அரிய கருவூலத்தை வெளிக்கொணரும் முயற்சி முழுமை பெறவில்லை. பல்லோர் தேவையாக – தேடலாக அம்முயற்சி விரைவுபடுத்தப்படவில்லை. நாம் உலகிற்கு வழங்கக் கூடிய உன்னத நுட்பங்கள் உள்ளன. வெளிக்கொணர தடையாக இருப்பது நமது அறியாமை. சித்தர்கள் பேசிய ஆன்மிகம்தான் அறிவியல் சார்ந்த ஆன்மீகம். அவர்கள் காட்டிய வழியில் பயணித்திருந்தால் நாம் உலகினர் வியக்க வாழ்ந்திருப்போம். உலகு நலமுற அரிய நுட்பங்களை வழங்கியிருப்போம். இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நோயற்ற வாழ்வாம் குறையற்ற செல்வத்தை வழங்குபவர்களாக அறியப்பட்டிருப்போம்.

மாறாக, அறியாமைச் சேற்றிலே அழுந்தி, நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டே, வாழ்ந்து, பழைமைச் சிறப்பையெல்லாம் சரியான புரிதலின்றியே. கிளிப்பிள்ளைகளாக, மனவளமும், ஆன்ம பலமும் குன்றியவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆத்திரப்படாமல் சிந்தியுங்கள். சுயபரிசோதனை செய்து பாருங்கள். ஒவ்வொரு தருணத்திலும் செயலிலும் நான் சென்ற கட்டுரையில் சமர்ப்பித்த எளிய சூத்திரமான, என்ன ? ஏன் ? யார்? எங்கே? எப்படி? எப்போது? தக்கவாறு பயன்படுத்தி விடைகாணுங்கள். பயணத்தை தொடருங்கள். பாதையை புதுப்பித்துக் கொண்டே அறிவு சார்ந்த ஆன்மீகப் பயணத்தை தொடருங்கள். காற்றில் கரைந்த ஆன்மநேய சித்தர் வள்ளலார் போதித்தது தான் அறிவியல் சார்ந்த ஆன்மீகம்.

அறிவியல் சார்ந்த ஆன்மீகம் விளக்க– வொண்ணாப் புதிர் அல்ல. புரிந்து செயல்படு. காரணம் தெரிந்து காரியம் ஆற்று.

பிறிதின் நோய் தன் நோய் போல் உணரும் தன்மையும், உள்ளார்ந்த தயவும், காருண்யமும் தான் அறிவு சார்ந்த ஆன்மீகம்.

நமக்காக – உலக நன்மைக்காக – வம்மின் உலகீர் என அழைத்து அருட்பிரகாசர் அருளியதுதான் ஆன்மநேய ஆன்மீகம்.

தற்போதைய தேவை, தயவுப் புரட்சி, இப்புரட்சி துவங்கினாலே போதும், அகமம் புறமும் தூய்மையாகும், மனிதர்கள் அன்பால் பிணைக்கப்படுவர், ஏற்றத்தாழ்வுகள் மறையும். எல்லார்க்கும் எல்லாம் என இடம் நோக்கி நடக்கும் போது இசைத்தபோது, இசைத்தவை, இசைத்தவர்க்கே தடையின்றி கிடைக்கும், தயவுப் புரட்சி வெற்றியடையுமென்றால் பிற புரட்சிகள் யாவுமே வெற்றிகரமாக வலம்வரும், பசுமைப்புரட்சி, வெண்மை புரட்சி, தூய்மைப்புரட்சி எனப் பேசப்பட்டவை யாவும் நிறைவடையாமல் இருப்பதற்குக் காரணமே தயவுப் புரட்சியை பயன்படுத்தத் தவறியது தான்.

தயவுப்புரட்சி துவங்குமுன் இறைவனைப் புரிந்துகொண்டு துவங்குவது நல்ல துவக்கமாக அமையும்.

இறைவனைத் துதித்து என்றல்லவா சொல்லி இருக்க வேண்டும். இறைவனை புரிந்துகொண்டு என்று எழுதிவிட்டீர்களே என வினவுவோர் இருப்பர். இறைவனைப் புரிந்து கொண்டு துதிப்பது தான் நற்பலன் ஈனும். எண்ணிய எண்ணியாங்கு எய்திடல் எளிதாகும். இசைத்தோர்க்கெல்லாம், இசைத்தபோது. இசைத்தவையாவும் கிடைக்க வேணுமென்றால் இறைவனை நன்கு புரிந்துகொள்வது அவசியம். இறைவன் என்றால் என்ன?

இன்றுவரை இறைவன் அறியொணாப் பொருள் இறைவன் ஏன்? மனிதன் முழுமைபெற, இறைவன் யார்? பேரறிவாளன் – பேரியக்க பெருஞ்சக்தி இப்படியன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என எழுத்தற் கொண்ணாதே – தேவாரம் அருட்பெருஞ்சோதியாக ஆண்டவரைக் காண்பிக்கிறார் வள்ளலார்.

இறைவன் எங்கே ? எங்கும் உள்ளான். சர்வவியாபி. உன்னிலும், என்னிலும் தூணிலும், துரும்பிலும் உள்ளான். சிர நடுவில் அணுத்துகளாக உள்ளதாக ஞானியர் கூற்று. இறைவனை அடைவது எப்படி? மனமது செம்மையானால் அகத்தூய்மையால் – இறைவனை அடைவது எப்போது ? உன்னுள்ளே உள்ள உறுபொருளை உணரும்போது எனக்குப் புரிந்த அளவில் சுருங்கச் சொன்னேன். விளங்கிக் கொள்வதும். வினாதொடுத்து விமர்சிப்பதும் உங்கள் மனவளத்தின் தாகம்.

எனக்குள் ஒரு வினா? இறைவனிடம் ! நல்லோர் என அறியப்பட்ட ஆன்றோர் பலர் இன்னல்களுக்கு ஆளாகி உள்ளனரே! நீர் ஏன் காப்பற்றவில்லை?

ஏசு சிலுவையில் அறையப்பட்டது ஏன்? முகம்மது நபி போர்க்களம் காண வேண்டியிருந்தது. ஆதிசங்கரர் அச்சுறுத்தப்பட்டார். இராமானுஜர் பதுங்கி வாழ

**சாலவே இனிக்கும் சர்க்கரைத் திரளே**
**ஏலவே நாவுக்கு இனிய கற்கண்டே (1412)**

வேண்டியிருந்தது. தூய உள்ளம் கொண்ட தூய்மைத் திரு உருவான வள்ளல் பெருமான் மீது வழக்கு தொடரப்பட்டது. இவைகட்கும் விடை காண விழைவதுதான் விவேகம். விடை காண இயலும் கர்மவினை என்ற ஒரு சொல்லால் சமாதானமடைவது தன்னம்பிக்கைக்கும். தளராமுயற்சிக்கும். தொடர் பயணத்திற்கும் தடையாக அமையும்.

வினை விதைத்தவன் வினை அறுப்பான் ஏற்கலாம். தவறு செய்தவனுக்கு தண்டனை. இதைவிட அவனை திருத்துவது. பகைவனுக்கும் அருள்வது நல்லது என்றுதான் வள்ளுவர் அறிவுறுத்தினார். ஆனால், தீவினையே நினையாதோர் தீயோரால் தாக்கப்படுவது அன்றும் நடந்தது இன்றும் நடக்கிறது ! அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் ஆயப்படும்.

வள்ளுவரே தீர்ப்பு வழங்காமல் நமது ஆய்வுக்கு விட்டுவிட்டார். நாமோ, ஆய்வைத் தொடங்கவே இல்லை.

தொடங்காதது மட்டுமல்ல - தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும் - தர்மம் வெல்லும் என்றே நம்பிக் கொண்டிருக்கிறோம்.

தர்மத்தை, சூது ஏன் கவ்வ வேண்டும் / சூது ஏன் என்று கேட்டிருக்க வேண்டாமா? சூது, தர்மத்தைக் கவ்வுதல் நிகழ்ந்திருக்கக் கூடாது. இப்படி எண்ணுவது. இயங்குவதுதான் அறிவியல் சார்ந்த ஆன்மீகம்.

பாரதி அன்றே துணிந்து குரல் கொடுத்தான். பாஞ்சாலி சபதத்தில் சூது, தீது என்ற சொல்லியதோடு நிறுத்தாமல். தருமன் சிறியர் செய்கை செய்தான் எனச் சாடினான்.

இன்று, சூது மட்டுமல்ல, பஞ்சமா பாதகங்களும் வெவ்வேறு வடிவங்களில் உலா வருவதை, நாம் வேடிக்கையாகத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். களவு என்ற கொடிய செயல் மட்டும் எடுத்துள்ள வடிவங்கள் - கள்ளப்பணம் - கறுப்புப் பணம் - கையூட்டு - அபகரிப்பு - ஆக்ரமிப்பு இவையெல்லாம் களவின் மாறுவேடங்கள் தானே ! ஐயன்மீர் ! நீதிமன்றங்கள் களைத்துப் போய்விட்டன!

இந்த கணத்தில். இதைப் படித்து கொண்டிருக்கும் சிலருக்கு ஓர் ஐயம் ! இறை கோட்பாட்டில் முரண்பாடு தொனிப்பதாக யாருக்கேனும் சிறிதளவு சந்தேகம் எழுந்தாலும் தெளிவுபடுத்திடல் அவசியம்.

இறைவன் ஏகனா ? அநேகனா ? இருக்கிறானா ? இல்லையா? என்பதல்ல நமது ஆய்வு. இறைவன் வேண்டும் - வேண்டும் - வேண்டும். ஐயப்பாடாது அகத்தது உணர்வானை தெய்வத்தொடு ஒப்பக் கொளல் - வள்ளுவர் ஐயப்பாடாது அகத்தது உணர்வது தான் நமது இப்போதைய தேவை. எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா ? என்றான் பாரதி. ஒரு நூறு இன்பங்களை அடையாளப்படுத்தி, ஆய்வு செய்து - நுகர்ந்து இன்பம் கண்டிருப்போமா ?


நிலம் என்னும் நல்லாள் நல்கும் எத்தனை வகை தானியங்கள் - எத்தனை வகை தாவரங்கள் = எத்தனை வகை வடிவங்களில் வண்ணங்களில் வாசனைகளில் மலர்கள் - எத்தனை வகை ருசிகளில் கனிகள் - எத்தனை வகை வடிவங்களில் இலைகள் - எத்தனை வடிவங்களில் ஜீவராசிகள் - இவைகளை புரிந்து கொள்ள இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆகுமோ அதுவரை ஆண்டவன் நம்பிக்கை அவசியம், அவசியம்.

முதல் சுவாசம் துவங்குவது எப்படி ? எங்கிருந்து வருகிறது ? என்பதும் இறுதி மூச்சு எப்படி நிற்கிறது ? எங்கே செல்கிறது என்பதும் இன்னும் புரியாதவனாகவே இருக்கிறான் மனிதன்.

பிரபஞ்ச இரகசியங்களில் அவிழ்க்கப்படாத முடிச்சுகள் இன்னும் ஏராளம், ஏராளம். இவைகளை முழுமையாக புரிந்து கொள்ள ஆண்டவன் தான் எண்ணுந்திறனை நமக்க அளித்திடல் வேண்டும்.

எண்ணமும் - எழுத்தும் தருபவனை வணங்கி, தயவுப்புரட்சியை இக்கணமே துவங்குங்கள். **பட்டினியில்லா, குற்றமில்லா, நோயில்லா உலகு நிச்சயம் உருவாகும்.**

இன்றைய உலகில் மக்களை ஈர்த்துக் கொண்டிருப்போர் ஆன்மீகவாதிகள் - அரசியல்வாதிகள் - அறிவியலார் - களியாட்டக் கலைஞர்கள். அடுத்த இதழில் இவர்களை ஆய்வு செய்து, ஆன்மீகம் தழுவிய அறிவியல் பற்றி விவாதிப்போம். தங்கள் விமர்சனம் எனது எழுத்துப் பயணம் தொடர உதவும்.



**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488

**உலப்புறாது இனிக்கும் உயர்மலைத்தேனே**
**கலப்புறா மதுரம் கனிந்த கோற்தேனே (1414)**



# திருமண வாழ்த்துக்கள்!



மண நாள் : 15.12.2019

மணமக்கள் : Wகண்ணபிரான்

X; லீலாவதி

மணமகள் திரு கண்ணபிரான் அவர்கள் அறக்கட்டளையில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அளப்பரிய அற்புதத்தொண்டு செய்து கொண்டிருக்கிறார். இல்லறம் காணும் புதுமணத் தம்பதிகள் வளமோடும் நலமோடும் வாழ எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் பிராத்திக்கிறோம். பதினாறு செல்வங்களும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்த்துவாராக!

நாள் : 27.12.2019

வாழ்த்துக்களுடன்
தீபம் நிர்வாகிகள்
வேளச்சேரி, சென்னை



## நன்றி ! நன்றி ! நன்றி !

**தனிப்பட்ட ஆன்மிக வளர்ச்சி குறித்து ஆராய, திரு. ஜோதி சதுரகிரியார் அவர்கள் அவரது சொந்த ஊருக்கு சென்றிருக்கிறார். இதுவரை அவர் தீபம் அறக்கட்டளைக்கும், தீபநெறி சன்மார்க்க இதழுக்கும் ஆற்றிய தொண்டிற்கு மனமார்ந்த நன்றி! சன்மார்க்கத்தில் சிறந்து விளங்க தீபத்தின் வாழ்த்துகள்!**

**நவையிலாது எனக்கு நண்ணிய நறவே**
**சுவையெலாம் திரட்டிய தூயதீம் பதமே (1416)**

## மாதாந்திர சொற்பொழிவு

23




நித்ய தீப தருமச்சாலையில் நடைபெற்ற மாதாந்திர சொற்பொழிவு.
சொற்பொழிவாளர் **திரு. D. சகாதேவன்,** ஜமீன்பல்லாவரம் – நாள் : 07.12.2019

# அடுத்த மாத சன்மார்க்க சொற்பொழிவு

24

## நித்ய தீபத் தருமச்சாலையில்

## மாதந்தோறும் முதல் சனிக்கிழமை சத்சங்கம் (சொற்பொழிவு)

நாள் : 4.1.2020 (சனிக்கிழமை) / நேரம் : மாலை 6.00 மணி முதல் இரவு 8 மணி வரை.

தலைப்பு : **“மனமும் எண்ணங்களின் வடிவமும்”**

சொற்பொழிவாளர் : **பிரம்மஸ்ரீ ஏழுமலை** அவர்கள்

இடம் : **நித்ய தீபத் தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி,
சென்னை - 600 042.
செல் : 9444073635 / 22442515



**பதம்பெறக் காய்ச்சிய பசு நறும் பாலே**
**இதம்பெற உருக்கிய இளம்பசு நெய்யே (1418)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

## 43. அழியா வரம்தரு அமுதசபை

85. வாரமும் அழியா வரமுந் தருந்திரு
86. ஆரமுதாஞ்சபை அருட்பெருஞ் ஜோதி

(உ-வி.) நமது அருட்பெருஞ்ஜோதி சபையே திருவாரமுதவண்ணமானதாம். உலகம் கண்டுள்ள எந்த ஒரு சபையும் அல்லது ஆலயமும் அமுதாலயமாக இல்லை. யோகஞானியர் தம் அகத்தே அறிவாற்கண்ட ஆன்மாலயமே, அதன் அழிவற்ற தன்மை கருதியும், அந்நிலையுறுவோர் பெறும் அவ் இயற்கை இயல்கருதியும் அதனை அமுதாலயமாக அணிந்து கூறியுள்ளனர். அகண்ட வெளிநிறை இறைஒளி நிலையே பாற்கடல் எனவும், அதில் செயல்பட்ட பிரபஞ்சக் காரியப்பாட்டில் மனிதவடிவம் தோன்றி. மிருத்து என்னும் மரணத்தைக் கடந்து அமிருத்து அல்லது அமிர்தம் என்ற அமுதத்தையே கண்ணுற்ற ஆன்றோர் அதனைப் பலவாறு கற்பனை செய்து வெளியிட்டனர். திருவாரமுது என்பது. அகம் ஒளிர் ஆன்மஜோதி வடிவேயாம். இத்திருவாரமுதே, பாற்கடலிற் பள்ளிகொண்ட திருமாலாகவும் கற்பித்தனர். நிரவி யழுலுருவாய் நீண்ட வெளிகாணில் அரவணையா னாகும் உடம்பு. - ஔவை குரல்

அறிவாற்கண்ட அகஜோதி, மனிதனுக்கு அற்புதச் சித்திவல்லபம் நல்கி, சிலகாலம் ஆடி மகிழச் செய்தது. பின்னர் அடங்கிக் கிடக்கச் செய்துவிட்டது. அவ்வமுத ஜோதி தேவப்பதவியை வழங்கிச் சிலரை நெடுங்காலம் விளங்கச் செய்தது. எனினும், அருட்பெருஞ்ஜோதியின் இயல் வெளிப்பட்டு மனிதனுக்கு என்றும் அழியாது ஆனந்தவாழ்வில் நிலவச்செய்யவில்லை முன்பு எக்காலமும்.

இத்தருணம் நமது அகப்பெரும்பதியே அருட்பெருஞ்ஜோதி அம்பலமாகித் திருவாரமுதமாய்த் திகழ்கின்றது. இதனை, நாம் அடைய, நிறையருள் வழங்கா முன்னெறி ஏதும் பயன்படாதெனக் கண்ட நம் வள்ளல் நிறையருட் சுத்தசன்மார்க்கத்தை வழங்கியுள்ளார். இந்நெறி சுத்த அன்பு அடிப்படையில் கிடைக்கப் பெற்றதாம். இம்மார்க்கிக்கு முதலில் வேண்டுவது சுத்தம், சுத்தமாவது, சத்விசாரத்தால் அகவடிவமுற்று இலங்கிநிற்பது. இந்நிலை நின்று மெய் அன்பு பெருகப்பெருக உலகில் வாழ்வதால், உள்ளொளியின் அருட்சக்தி வெளிப்பட்டு, அழியாமையோடு நிறையின்ப வாழ்வும் ஆணை செய்கின்றதாம். இதனையே இங்கு வாரம் (அன்பு) அழியாவரம் ஆகியவை தந்து நித்தியானந்த அமுதவாழ்வில் விளங்கச் செய்வது என்றார்.

குறிப்பு - பழநெறிகளில், தீட்சை, குருஉபதேசம், உபநயனம், ஞானஸ்நானம் முத்திராதானம் முதலியன முதற்கண் பெற்றே அந்தந்த நெறிக்கு உரியவர்களாகி முழுப்பயன் அடையலாம் என்பது. அருள் உண்மை விளங்காத காலத்துக் கற்பிக்கப்பட்டவையாம். இப்பொழுது அருட்ஜோதி வெளிப்பட்டுள்ளதால், எவரும் சுத்தநிலையுற்று, அகம்பொருந்தி, அன்புநிறைவால் அனக வாழ்வு ஏற்பதே வேண்டப்படுவது. இந்தச் சுத்த சன்மார்க்கமே மனிதனை மரணமில்லாப் பெருவாழ்வில் நிறை இன்போடு விளங்கச் செய்வதாம்.

சுத்த சன்மார்க்க உண்மை கொண்டுதான் திருவருட்பாவின் (முக்கியமாக ஆறாந்திருமுறையின்) பொருள்விளக்கம் காண வேண்டும். மற்று பழநெறிப்பற்றொடு பலகால் பயின்றாலும் உண்மை விளங்காது. சுத்த சன்மார்க்கியின் உண்மையும் அறிய முடியாது.

**உலர்ந்திடாது என்றும் ஒரு படித்து ஆகி**
**மலர்ந்துநல் வண்ணம் வயங்கிய மலரே (1420)**

# நித்ய தீபத் தருமச்சாலை

**கடந்த 13 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான**
**பசியால் வாடும் வறியவர்களுக்கு, பல்வேறு தருமச்சாலைகள் மூலம்**

## ஆயிரக்கணக்கானோருக்கு அன்னம்பாலிப்பு



**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற அன்புடன் அழைக்கின்றோம்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

## DONATIONS ARE WELCOME FOR DHARUMACHALAI BUILDING FUND

**முன்பதிவிற்குத் தொடர்பு கொள்ளவும் : 044 - 2244 2515 / 94440 73635**

Donations may be sent by crossed cheque to:

**DEEPAM TRUST**

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

For Bank Transfer

| | | |
|---|---|---|
| Bank / Branch | : | State Bank of India / IIT Branch |
| Current A/c. No. | : | 30265475129 |
| IFSC | : | SBIN0001055 |

**வங்கி பரிமாற்றத் தகவலை 9444073635 என்ற எண்ணிற்கு அவசியம் தெரிவிக்கவும்.**

**இகந்தரு புவிமுதல் எவ்வுலகு உயிர்களும்**
**உகந்திட மணக்கும் சுகந்த நன்மணமே (1422)**

## வள்ளலார் வலியுறுத்தும் சுத்த சன்மார்க்க கடவுள் ஆய்வுப் பார்வை !

வள்ளல் பெருமான் கடைசி காலகட்டத்தில், அதாவது சித்தி பெறுவதற்கு சற்று மூன்று மாதத்திற்கு முன்பு அருளிய பேருபதேசம் பகுதி சன்மார்க்க ஆய்வுப் பயணத்தில் மேற்கொள்வோர்க்கு மிகவும் அவசியமானதாகும். வள்ளல் பெருமான் வலியுறுத்தும் கடவுள் முற்றிலும் இதற்கு முன் வந்த நாம் கண்ட கடவுள் நிலைகளில் இருந்து வேறுபட்டவர் என்பதற்கு பேருபதேச குறிப்புகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்து இருக்கின்றன. அந்தப் பேருபதேசக் குறிப்புகளை நாம் ஆய்வு செய்யலாம்.

சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம். அவற்றில் தெய்வத்தைப் பற்றிக் குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதேயன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்க வேண்டாம். ஏனெனில். அவைகளிலும் அவ்வச்சமய மதங்களிலும் – அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக்கூடுமேயல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும், இவைகளுக்கெல்லாம் சாக்ஷி நானேயிருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்து கொண்டிருந்தது இவ்வளவென்ற அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலருக்குத் தெரியும். அந்த லக்ஷியம் இப்போது எப்படிப் போய்விட்டது, பார்த்தீர்களா ! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாட்சி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற = திருவருட்பாவில் அடங்கியிருக்கிற – ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால், அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

குறிப்பு வள்ளல் பெருமான் ஆரம்ப காலத்தில் அதாவது 1895 முன் நமக்கு அருளிய திருஅருட்பா ஐந்து முறை பாடல்களில் வள்ளல் பெருமான் நமக்கு சைவ சித்தாந்த கடவுள் நிலையை பற்றி கூறுவதைக்கான முடிகிறது. அதனாலே இப்போது கூட சில அன்பர்கள் வள்ளல் பெருமான் சைவ சித்தாந்த கடவுள் நிலையைத்தான் வள்ளலாரும் கூறுகிறார் என்று கூறி வருகிறார்கள். ஆனால் பேருபதேச பகுதி இங்கே சைவ சித்தாந்தக் கடவுள் நிலை. சன்மார்க்க நிலையில் இருந்த காணும்போது மிகவும் அற்பமாக இருப்பதாக வள்ளல் பெருமான் இங்கே குறிப்பிடுகிறார். இதே கருத்தை திருஅருட்பா ஆறாம் திருமுறையில் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகிறார்.

பேருபதேச குறிப்புகளை நாம் ஆய்வு செய்யலாம். இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலை மேலேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டுவிட்டீர்களானால், என்னைப்போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக் கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலையில் தூக்கிவிட்டதென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த இடத்துக்குத் தூக்கிவிட்டது யாதெனில் அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தாரென்று வாசகப் பெரு விண்ணப்பத்திலும். எத்தேவரையும் நின் சாயையாய்ப் பார்த்ததேயன்றித் தலைவ ! வேறெண்ணியதுண்டோ என, தேடியதுண்டு நினதுருவுண்மை என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும் விண்ணப்பித்திருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில், கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக என்றதுதான். என்னை யேறாநிலை மிசை யேற்றி விட்டது யாதெனில் தயவு. தயவு என்னும் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது.

மாயையாற் கலங்கி வருந்திய போதும்
வள்ளல்உன் தன்னையே மதித்துன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே அல்லால்
தலைவவே றெண்ணிய துண்டோ
தூயபொற் பாதம் அறியநான் அறியேன்
துயர்இனிச் சிறிதும்இங் காற்றேன்
நாயகா எனது மயக்கெலாம் தவிர்த்தே
நன்றருள் புரிவதுன் கடனே.

– திருஅருட்பா 3635

கருணையும் சிவமே பொருள்எனக் காணும்
காட்சியும் பெறுகமற் றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கறி வித்த
வண்ணமே பெற்றிருக் கின்றேன்

**யாழுறும் இசையே இனிய இன்னிசையே**
**ஏழுறும் இசையே இயல் அருளிசையே (1424)**

**இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம்**
**எய்திய தென்செய்வேன் எந்தாய்**
**தெருள்நிலை இன்றிக் கலங்கினேன் எனினும்**
**சிறுநெறி பிடித்ததொன்றிலையே.**

– திருஅருட்பா 3503

அந்தத் தயவுக்கு ஒருமை வர வேண்டும். அந்த ஒருமை இருந்தால்தான் தயவுவரும். தயவு வந்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுடனிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படியிருந்தாலும். அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன். மிரட்டிச் சொல்லுவேன். தெண்டன் விழுந்து சொல்லுவேன் அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன். அல்லது ஆண்டவரை நினைத்து பிரார்த்தனை செய்வேன். இப்படி எந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச் செய்து விடுவேன். நீங்கள் எல்லாரும் இப்படியே செய்தல் வேண்டும். இராத்திரிகூட நான் இல்லாமல் இந்த ஜனங்கள் க்ஷணநேரம் இருக்க மாட்டார்களே என்று. என்று... ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். அது இங்கே இருக்கிற ஜனங்கள் மட்டில் மாத்திரமல்ல. உலகத்திலிருக்கிற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக் கொண்டேன். ஏன் அப்படி ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன் என்றால், எல்லவரும் சகோதரர்களாதலாலும், இயற்கை யுண்மை யேகதேசங்களாதலாலும், நான் அங்ஙனம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்போது நீங்கள் – இதுவரைக்கும் ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களாயிருந்தாலும் – சாலைக்குப் போகக் கொஞ்ச தினமிருக்கின்றது – அதற்குள்ளாக நீங்கள் நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவதோடுகூட, மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்துக்கு அப்படிச் செய்து கொண்டிருங்கள். நானும் ஆண்டவரிடத்தில் இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜீவர்களும் நன்மையடையப் பிரார்த்தித்தும். ஆண்டவரிடத்தில் கேட்டுக் கொண்டும் வருகின்றேன். ஆதலால், நீங்கள் அப்படிச் செய்து கொண்டிருங்கள்.

சமயந்தவிர மதங்களில் உள்ள வேதாந்தி சித்தாந்தி யென்று பெயரிட்டுக் கொண்ட பெரியவர்களும் உண்மை அறியாது, சமயவாதிகளைப் போலவே ஒன்று கிடக்க ஒன்றை உளறுகிறார்கள். ஆதலால் நீங்கள் அஃது ஒன்றையும் நம்பவேண்டாம். எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்படச் சொல்லவில்லை. தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலேயல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள் ! என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்து கொள்ளவில்லையென்றால், ஒரு பதார்த்தத்தை அனுபவித்தாலல்லது அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல். தெய்வத்தையுள்ளபடி அனுபவித்தாலல்லது. தெய்வத்தினிடத்தில் பிரியம் வாராது. ஆதலால். தெய்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற முக்கிய லக்ஷியத்திலிருந்து கொண்டு விசாரஞ் செய்துகொண்டிருங்கள். இதுதான் பேருபதேசத்தில் வள்ளலாரின் வாக்கு சமயங்களை, மதங்களை, முற்றிலும் கைவிட்டதனால் தான், தான் மேலான பெருவெளி கடவுள் நிலையை அடைந்ததாக பெருமான் கூறுவதை நாம் மிகவும் ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டி உள்ளது.

இந்த சன்மார்க்கக் கடவுள் நிலையை ஒரு மனிதன் அடைவதற்கு, இதற்குமுன் நமக்கு கடவுள் நிலை என்று காட்டிய மதங்களும், சமயங்களும் முக்கிய தடைகளாக இருப்பதாய் நமக்கு இந்த பேருபதேச பகுதியில் வள்ளலார் பெருமான் மிகவும் வலியுறுத்துவதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். சன்மார்க்கக் கடவுள் நிலை என்பது எல்லா உயிர்களையும் தன் உயிராக கருதும் ஆன்மாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே அந்த ஆன்ம நேயத்திற்கு கருணையே அடிப்படை. கருணை ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது பேதம். இந்த பேதம் ஏற்படுவதற்கு காரணமாக இருப்பது சாதி. மதம். சமயம். எனவே இதனை கைவிட்டவர்களே சுத்த சன்மார்க்க அருளுக்குப் பாத்திரமாவார்கள் என்ற வான் உலகத்தில் ஏற்பட்டுள்ள இந்த அருள் மாற்று சட்டத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். எனவே இனிமேல் கருணை மையமாக மாறாமல் யாரும் இந்த உலகத்தில் இருந்து மேல் உலக வாழ்க்கை வாழ முடியாது என்ற அருள் சட்டத்தை நாம் அனைவரும் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஆய்வுப் பார்வைகள் தொடரும்.



ஆன்மநேயன் **பொதிகைப்பிரியன்**
கள்ளக்குறிச்சி
கைபேசி : 97897 88198

**திவள்ஒளிப் பருவம் சேர்ந்த நல்லவளே**
**அளவொடும் கூடி அடைந்ததோர் சுகமே (1426)**

# ஆன்மாவை ஆராதிப்போம்

## வாழ்க்கையின் அற்புதமான நான்கு நிலைகள்

உடல், சொந்த பந்தங்கள், செல்வம் சொத்துக்கள், ஆன்மா.

ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தருக்கு சொல்லப்பட்ட கதை. ராஜா நான்கு மனைவிகளைப் பெற்றிருந்தார்.

நான்காவது மனைவிக்கு மிக அதிக அக்கறை தருவார். மூன்றாவது மனைவிக்கு இன்னும் கொஞ்சம் அக்கறை தருவார். இரண்டாவது மனைவியை நேசிப்பார். முதல் மனைவியைக் கண்டு கொள்ளவேமாட்டார். ராஜா மரணப்படுக்கையில் இருந்தபோது, நான்காவது மனைவியிடம் கேட்டார். நான் இறக்க போகிறேன். என்னுடன் வருகிறாயா என்று. முடியாது என்று மறுக்கிறார் நான்காவது மனைவி. மூன்றாவது மனைவியிடம் கேட்கிறார். நான் இறக்க போகிறேன் என்னுடன் வருகிறாயா என்று. மூன்றாவது மனைவியும் மறுக்கிறாள்.

இரண்டாவது மனைவியிடம் ராஜா கேட்கிறார் நான் இறக்க போகிறேன் என்னுடன் வருகிறாயா என்று. இரண்டாவது மனைவியும் வர மறுக்கிறார்.

முதல் மனைவி தாலி கட்டிய மனைவி, சட்டப்படியான மனைவி, இதோ நான் வருகிறேன் என்று சொல்கிறார். **அவர்தான் நம்முடைய ஆத்மா.** நம்முடனே இருக்கக்கூடிய ஆத்மாவை நாம் கண்டுகொள்வதே இல்லை. அது இறைவனுக்குச் சொந்தமானது.

இரண்டாவது மனைவி நம்முடைய சொந்த பந்தங்கள், உற்றார் உறவினர், மனைவி கணவன், பிள்ளைகள், இவர்கள் யாரும் நம் இறப்பிற்குப் பின் நம்முடன் வருவதில்லை.

மூன்றாவது மனைவி நாம் சேர்த்து வைத்த பொருட்கள் சொத்துக்கள், நிலங்கள், வங்கி இருப்பு முதலானவை. இவை யாவும் நம்முடன் வருவதில்லை. காதறுந்த ஊசி கூட நாம் எடுத்துச் செல்ல முடியாது.

நான்காவது மனைவி நாம் பொத்தி பொத்தி வளர்க்கக்கூடிய இந்த உடம்பு, அலங்கரிக்கின்ற உடம்பு, விதவிதமான ஆடைகள், நகைகள் அலங்காரங்கள் கொண்டு அலங்கரிக்கக் கூடிய இந்த உடம்பு நம்மோடு வருவதில்லை. இறந்தபின் எரித்து விடுவார்கள் அல்லது புதைத்து விடுவார்கள்.

ஆன்மா இறைவனுக்குச் சொந்த மானது. நம்முடனே இருக்கிறது. நாம் அதைக் கண்டு கொள்வதே இல்லை. தூய்மைப்படுத்துவது இல்லை. அதன் உள்ளே இருக்கக்கூடிய இறையை உட்பொருளை உணர்வதே இல்லை. நிறை காண்பதே இல்லை.

ஆன்மாவைத் தூய்மைப்படுத்த நாம் தானதர்மம் செய்து தொண்டு செய்து ஆன்மாவை மென்மேலும் தூய்மைப் படுத்துவோம். இறையருள் பெறுவோம்.



கவிமாமணி
கங்கை **மணிமாறன்**
கங்காதரபுரம், +919443408824

**நாதநல் வரைப்பின் நண்ணிய பாட்டே
வேதகீதத்தில் விளை திருப்பாட்டே (1428)**

ஜெர்மனி நாட்டை சேர்ந்த மாணவர்களும் சென்னை IIT ல் படிக்கும் மாணவர்களும் உற்சாகமாக அன்னதான தொண்டு செய்த காட்சி





ஆதரவற்ற ஓர் ஏழை மூதாட்டிக்கு
போர்வை கொடுக்கும் காட்சி

RNI : TNTAM / 2010 / 35284
"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP NO. TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
R.No.TN/CC(S)Dn/412/17-19
Posted at Patrika Channel, Egmore, Chennai - 600 008. | Date of Publication : 20th of Every Month.
**Published by :** M. Balakrishnan on behalf of Deepam Trust, #30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and **Printed by :** RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015. **Editor : M. Balakrishnan**



தினசரி நூற்றுக் கணக்கானவர்களுக்கு பசியாற்றுவிக்கும் நித்ய அன்ன தருமச்சாலை




**Tata Ace** வாகனம் மூலம் தினமும் தேடிச்சென்று அன்னமிடுதல்

If undelivered Please Return to:

**DEEPAM TRUST**
(REDG. No. - 2035/07)
#30, Drowapathi Amman Koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 2244 2515 | Cell : +91 94440 73635
E-mail : admin@deepamtrust.org
Web : www.deepamtrust.org

To
**Shri. / Smt. / Dr.**

Posted at Patrika Channel
Posted on 27-12-2019
Egmore, Chennai - 8